# நமதமைப்பின் திருவள்ளூர் மாவட்டப் பொருளாளர் திரு.K.ஜம்பு அவர்கள் தகவல்பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்ட கேள்வியும் பதிலும்

பெறுநர் :

பொதுத் தகவல் அலுவலர் அவர்கள்,
பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 9.

அய்யா

தகவல் உரிமைச் சட்டம் 2005ன்படி பின்வரும் கேள்விகளுக்கு தகவல்கள் வேண்டப்படுகிறது.

1. அரசுப்பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியில் பணியாற்றும் முதுகலை ஆசிரியர்களுக்கு M.Ed படிக்காமல், M.Phil, P.Hd., P.G.D.T.E போன்ற உயர்கல்வித் தகுதி பெற்றிருப்பின் முதலாவது ஊக்க ஊதியம் பெற தகுதி உண்டா?
2. அரசாணை (நிலை) எண் 194, பள்ளிக்கல்வித்துறை (இ2) துறை நாள் 10.10.2006 (மற்றும்) அரசாணை (நிலை) எண் 1170 கல்வி அறிவியல் (மற்றும்) தொழில்நுட்பவியல் துறை நாள் : 20.12.93ன்படி M.Ed படிக்காத அரசுப்பள்ளியில் பணியாற்றும் முதுகலை ஆசிரியர்களுக்கு எம்.பில் / பி.எச்டி/ பிஜிடிடிஇ போன்ற உயர்கல்வித்தகுதிக்கு ஊக்க ஊதியம் பெற தடை ஏதேனும் உண்டா? (முதலாவது ஊக்க ஊதியம்)
3. முதலாவது ஊக்க ஊதியம் பெற மேற்கண்ட கேள்வி எண் 2ன்படி தடை ஏதேனும் இருப்பின் அதற்கான தகவல் தேவை?

---

## தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர்(தொழிற்கல்வி) மற்றும் தகவல் அளிக்கும் அலுவலரின் செயல்முறைகள் - சென்னை 600 009.

ஓ.மு. 117603/கே/இ1/08 நாள் : 7.1.2009

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் - அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதுகலை ஆசிரியர் - ஊக்க ஊதிய உயர்வு - தகுதிகள் சார்ந்த விவரம் கோருதல் - சார்ந்து.

பார்வை - அரசுக்கடிதம் எண் : 38525/இ2/08 நா.23.12.2008

பார்வையில் குறிப்பிட்டுள்ள அரசுக்கடிதத்துடன் பெறப்பட்ட தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம் பொருளாளர் திரு ஜம்பு என்பவரால் கோரப்பட்டுள்ள தகவல்கள் கீழ்க்கண்ட வாறு தெரிவிக்கப்படுகிறது.

கேள்வி எண் 1 முதல் 3க்கான தவல்

முதுகலை ஆசிரியர்களுக்கு எம்.எட். பயிலாமல், எம்.பில் பட்டத்திற்கு முதலாவது ஊக்க ஊதிய உயர்வு பெற தகுதி உண்டு எனவும், மொத்த பணிக் காலத்தில் இரு ஊக்க ஊதிய உயர்வுகளுக்கு மிகையாமல் என்ற அரசாணை நிபந்தனைகளுக்கு உட்பட்டு அமையும் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

நகல்

1. அரசு செயலாளர்
   பள்ளிக்கல்வித்துறை (இ2) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்படுகிறது.
2. அ5 பிரிவு.